

நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா கருத்தரங்கம் நாமக்கல் நளா ஹோட்டலில் நாமக்கல் கிழக்கு மாவட்ட செயலாளரும், பாராளுமன்ற மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு சங்க தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் தலைமையில் நடைபெறறது. கழக செய்தி தொடர்பு செயலாளர் TKS.இளங்கோவன் துவக்கி வைத்தார். இக்கருத்தரங்கில் கழக கொள்கை பரப்பு செயலாளரும், மாநிலங்களவை கழக குழுத்தலைவருமான திருச்சி சிவா எம்.பி., பேராசிரியர் கு. ஞானசம்பந்தன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். இக்கருத்தரங்கில் சேந்தமங்கலம் சட்டமன்ற உறுப்பினரும், மாவட்ட துணை செயலாளருமான கே.பொன்னுசாமி, நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.இராமலிங்கம், முன்னாள் மாவட்ட பொறுப்பாளர் பார்.இளங்கோவன் நாமக்கல் மாநகராட்சி மேயர் து.கலாநிதி மற்றும் மாநில, மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா கருத்தரங்கு!

## டி.கே.எஸ்.இளங்கோவன், திருச்சி சிவா எம்.பி., கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி., முனைவர் ஞானசம்பந்தன் பங்கேற்பு!

நாமக்கல், செப். 12

நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் நடைபெற்ற கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா கருத்தரங்கில் கழக செய்தி தொடர்பு செயலாளர் டி.கே.எஸ்.இளங்கோவன், எம்.பிக்கள் திருச்சி சிவா, கே.ஆர்.என்.இராஜேஸ்குமார், முனைவர் ஞானசம்பந்தன் ஆகியோர் பங்கேற்றனர்.

நாமக்கல் கிழக்கு மாவட்டத்தில் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா கருத்தரங்கம் நாமக்கல் திருச்சி சாலையில் உள்ள நளா ஹோட்டல் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. நாமக்கல் கிழக்கு மாவட்ட செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு சங்க தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் தலைமை தாங்கினார். சேந்தமங்கலம் சட்டமன்ற உறுப்பினரும், மாவட்டக் கழக துணை செயலாளருமான கே.பொன்னுசாமி, நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.இராமலிங்கம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கருத்தரங்கை கழக செய்தி தொடர்பு செயலாளர் டி.கே.எஸ்.இளங்கோவன் துவக்கி வைத்தார். இக்கருத்தரங்கில் கழக கொள்கை பரப்பு செயலாளரும், மாநிலங்களவை கழக குழுத்தலைவருமான திருச்சி சிவா எம்.பி, பேராசிரியர் கு.ஞானசம்பந்தன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.

கருத்தரங்கில், கழக கொள்கை பரப்பு செயலாளரும், மாநிலங்களவை குழு தலைவருமான திருச்சி சிவா எம்.பி. பேசியதாவது:-

பேரறிஞர் அண்ணா, தந்தை பெரியார் ஆகியோர் மறைந்து 50 ஆண்டுகளுக்கு மேல் ஆகியும் அவர்களது புகழ் இன்னமும் மறையவில்லை. அதே போல கலைஞர் அவர்களின் புகழும் இந்த தமிழ்மண்ணில் என்றும் நிலைத்து நிற்கும். திராவிட இயக்கம் இல்லாவிட்டால் இந்தியும், சமஸ்கிருஸ்தமும் தமிழ்நாட்டிற்கு வந்திருக்கும். தமிழை பாதுகாக்கும் இயக்கமாக திமுக இருந்து வருகிறது. பல்வேறு பரிமானங்களை கொண்ட தலைவர் கலைஞர் அவர்களைப் போல வேறு யாரும் இல்லை.

கலைஞர் ஏழை எளிய மக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்த வேண்டும் என்பதற்காக கலை உலகில், கண்ட கனவை ஆட்சிக்கு வந்த பிறகு செயல்படுத்தி காட்டினார். ஒவ்வொரு திட்டமும் ஏழை எளிய மக்களின் வாழ்வை மேம்படுத்த வேண்டும் என்ற நோக்கில் தான் அமைய வேண்டும் என்று அறிவித்து அதனை முழுமையாக செயல்படுத்தினார். அவரது வழியில் கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் செயல்பட்டு வருகிறார்.

தமிழ்நாட்டு மக்களின் மேம்பாட்டிற்காக முன்னாள் முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் நாட்டிற்கே முன்னுதாரணமான பல திட்டங்களை திறம்பட செயல்படுத்தினார். கலைத்துறையில் எழுதியதை, ஏழை எளிய மக்களின் நல்வாழ்வுக்காக, ஆட்சி அமைத்து செயல்படுத்திக் காட்டினார் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஏழை எளிய மக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்த வேண்டும் என்பதற்காக கலை உலகில் தான் கண்ட கனவை ஆட்சிக்கு வந்த பிறகு செயல்படுத்தி காட்டினார். ஒவ்வொரு திட்டமும் ஏழை எளிய மக்களின் வாழ்வை மேம்படுத்த வேண்டும் என்ற நோக்கில் தான் அமைய வேண்டும் என்று அறிவித்து அதனை முழுமையாக செயல்படுத்தியவர். அதனால்தான் அனைத்து சமுதாயத்திருக்கும் அரசின் திட்டங்கள் தங்கு தடையின்றி கிடைக்கப் பெற்று பயனடைந்தார்கள்.

அவரது வழியில் கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள், வளர்ச்சி அடைந்த தமிழ்நாட்டை உருவாக்க வேண்டும் என்ற நோக்கத்தில் பல்வேறு புதிய திட்டங்களை முன்னுரிமை கொடுத்து திறம்பட செயல்படுத்தி வருகிறார். மகளிர் காண மேம்பாட்டு திட்டங்கள், மாணவ மாணவிகளுக்கான கல்வித் திட்டங்கள், பெண்களுக்கான சொத்துரிமை, 1989ஆம் ஆண்டு முன்னாள் முதல்வர் கொண்டு வந்த பெண்ணுக்கு சொத்துரிமை திட்டம் இந்திய நாட்டிற்கு முன்னுதாரணமாக அமைந்தது என்று திருச்சி சிவா எம்.பி பேசினார்.

இதனையடுத்து திமுக செய்தி தொடர்பு செயலாளரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் டி.கே.எஸ்.இளங்கோவன் பேசும்போது, மத்திய அரசு கொண்டு வந்துள்ள புதிய கல்விக் கொள்கையை கடைபிடிக்காத மாநில அரசுகளுக்கு மத்திய அரசின் நிதியுதவி தர முடியாது என கூறுகின்றனர். கல்வி என்பது பொதுப்பட்டியலில் உள்ளவரை மத்திய மாநில அரசுகளுக்கு உரிமை உண்டு. போதிய நிதி வழங்க மாட்டோம் எனக் கூறுவது அரசியலமைப்பு சட்டத்தை மீறுவதாகும். எனவே கல்விக்கான நிதி ஒதுக்கீடு வழங்க கோரி திமுக பாராளுமன்ற உறுப்பினர்கள் தொடர்ந்து போராட்டம் நடத்தி கோரிக்கைகளை வலியுறுத்துவார்கள் என்று திமுக செய்தி தொடர்பு செயலாளர் டி.கே.எஸ். இளங்கோவன் பேசினார். முன்னதாக சென்னை தென்றல் நடனக் குழு சுதா வழங்கும் “கலைஞரின் குறளோவியம்” நாட்டிய நாடகம் நடைபெற்றது.

இக்கருத்தரங்கில் முன்னாள் மாவட்டப் பொறுப்பாளர் பார்.இளங்கோவன், மாவட்ட அவைத்தலைவர் சி.மணிமாறன், மாநகராட்சி மேயர் து.கலாநிதி, துணை மேயர் பூபதி, மாவட்ட துணை செயலாளர்கள் கே.செல்வம், வி.பி. ராணி,தலைமை செயற்குழு உறுப்பினர் மரு.இரா.மாயவன், பொதுக்குழு உறுப்பினர்கள், விமலா சிவக்குமார், சரவணன், கண்ணன், பூவராகவன், குணசேகரன், காளியப்பன், மாநில நிர்வாகிகள் நக்கீரன், சி.ஆனந்தகுமார்,

நகர கழகச் செயலாளர்கள் என்.ஆர்.சங்கர்,ராணா ஆனந்த், எஸ்.பூபதி, அ.சிவக்குமார், ஒன்றிய கழகச் செயலாளர்கள் கே.பி. இராமசுவாமி, ஆர்.எம்.துரைசாமி, அ.அசோக்குமார், வி.கே. பழனிவேல், கே.பி.ஜெகநாதன்,பி.பாலசுப்ரமணியம், பெ.நவலடி. எம்.பி.கௌதம், ஆர்.ஜெயப்பிரகாஷ், எஸ்.செந்தில்முருகன்,

பேரூர் கழகச் செயலாளர்கள் பொன்.நல்லதம்பி, ஆர்.எஸ்.எஸ்.ராஜேஷ், பி. ஜெயக்குமார், என்.செல்வராஜ், என்.தனபால், சி.செல்லவேல், முருகேசன், சுப்பிரமணியன், கே.அன்பழகன், பழனியாண்டி,இராசிபுரம் நகர் மன்ற தலைவர் கவிதா சங்கர், மற்றும் மாவட்ட நிர்வாகிகள், மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டரணி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் கழக சார்பு அணி நிர்வாகிகள் பேரூர் சார்பு அணி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

திமுக செய்தி தொடர்பு செயலாளரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான டி.கே.எஸ்.இளங்கோவன் செய்தியாளர்களிடம் பேசும்போது, தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு சிறப்பாக பராமரிக்கப்பட்டு வருகிறது. ஒரே நாளில் 6 கொலைச் சம்பவங்கள் தனிப்பட்ட மக்களின் காரணத்திற்காகத்தான் நடந்துள்ளது. இவற்றை தடுக்க உரிய நடவடிக்கைகளை மாநில அரசு எடுத்துள்ளது.

மணிப்பூர் மாநிலத்தில் பல வன்முறைகள் நடந்தாலும் பிரதமர், உள்துறை அமைச்சர், பாஜக அதில் அக்கறை கொள்ளாமல் அங்குள்ள மக்களே பாதுகாக்க தவறிவிட்டது. பாஜக ஆளும் உத்தரபிரதேசத்திலும் வன்முறைகள் நடந்து கொண்டு தான் உள்ளன.

மதுவிலக்கு குறித்த கேள்விக்கு பதில் அளித்த அவர், தமிழகத்தில் பல ஆண்டுகளாக மதுக்கடைகள் உள்ளன. குஜராத்தில் மதுவிலக்கு இருந்தாலும் போதை பொருட்கள் அங்கு உள்ளது. அங்குள்ள துறைமுகத்தில் போதை பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. பொதுவாக, மதுப்பழக்கத்தை ஒழிக்க முடியாது. மக்களுக்கு மன மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமே தவிர அதை தடுத்தால் விளைவுகள் வேறு மாதிரி இருக்கும்.

எதிர்க்கட்சிகளின் கோரிக்கைகளை திமுக அரசு செவி சாய்க்கவில்லை என்ற கேள்விக்கு பதில் அளித்த அவர், தமிழ்நாட்டில் எல்லா துறைகளிலும் மாநில அரச திமுக அரசு சிறப்பான மக்களாட்சி நடத்தி வருகிறது. எதிர்க்கட்சிகள் அரசியல் காழ்ப்புணர்சி காரணமாக குற்றச்சாட்டுகளை கூறி வருகின்றனர்.

திமுக கூட்டணிக்குள் அதிருப்தி நிலவுகிறதே என பா.ஜ.க. உள்ளிட்ட கட்சிகள் கூறிய கருத்துக்கு பதில் அளித்த இளங்கோவன், தி.மு.க. கூட்டணி ஒற்றுமையாக ஒருங்கிணைந்து செயல்படுகிறது. பா.ஜ.க. தமிழ்நாட்டில் நுழைந்து விடக்கூடாது என்பதற்கு தி.மு.க. கூட்டணி கட்சித் தலைவர்கள் உறுதியாக உள்ளார்கள். சில கொள்கை அடிப்படையிலான ரீதியான கருத்துகள் இருந்தாலும் கூட்டணியில் எழுத குழப்பமும் இல்லை. தொடர்ந்து தோல்வியை கண்டு வருவதால், எப்படியாவது வெற்றி பெற மாட்டோமா என்ற ஏக்கத்தில் தான் தி.மு.க. கூட்டணி குறித்து பா.ஜ.க. விமர்சித்து வருகிறது என்றும் இளங்கோவன் தெரிவித்தார்.



தருமபுரி மேற்கு மாவட்டம் காரிமங்கலம் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் வழக்கறிஞர் எம்.வீ.டி.கோபால் ஏற்பாட்டில் நடைபெற்ற கழக செயல்வீரர்கள் பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் மேற்கு மாவட்ட கழக செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் மற்றும் தருமபுரி எம்.பி.ஆ.மணி ஆகியோர் கலந்து கொண்டு கழக ஆக்கப்பணிகள் குறித்து சிறப்புரை ஆற்றினர். கூட்டத்தில் மாவட்ட பொருளாளர் முருகன், ஒன்றிய அவைத்தலைவர் எம்.ஜி.முனுசாமி, ஒன்றிய செயலாளர்கள் முனியப்பன், அன்பழகன், மூத்த வழக்கறிஞர் சந்திரசேகர், முன்னாள் எம்.எல்.ஏ ஜி.எல்.வெங்கடாச்சலம், நட்ராஜ், சுமதி, ராஜாமணி, செந்தில்குமார், சுந்தரம், பெரியண்ணன், கண்ணப்பன், தனகோடி, எம்வீடி.யுவராஜ் உள்ளிட்ட கழகத்தினர் கலந்து கொண்டனர்.


### முதல்வர் மு.க.ஸ்டாலின் – ஊரகப் பகுதிகளில்

# 5000 நீர் நிலைகளைப் புனரமைக்க ரூ.500 கோடி ஒதுக்கீடு!

## ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அறிவிப்பு!

**சென்னை, செப்.12–**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஊரகப் பகுதிகளில் 5000 நீர்நிலைகளைப் புனரமைக்க ரூ.500 கோடி ஒதுக்கீடு செய்து உத்தரவிட்டுள்ளார் என ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அறிவித்துள்ளார்.**



இது தொடர்பாக அரசு செய்தி வெளியீடு வருமாறு:

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சி, நீர் நிலைகளை தூர்வாரி, மழைநீரை சேகரித்து நீர் மேலாண்மை செய்வதற்கு முன்னுரிமை அளித்து பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

இதன் தொடர்ச்சியாக, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 22,051 சிறுபாசன ஏரிகளில் முதற்கட்டமாக நடப்பாண்டில் 500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 5,000 சிறுபாசன ஏரிகளை புனரமைப்பதற்காக 5.9.2024 அன்று அரசாணை வெளியிடப்பட்டுள்ளது என ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ. பெரியசாமி அறிவித்துள்ளார்.

இதன்படி, சிறுபாசன ஏரிகள் இயந்திரங்களைப் பயன்படுத்தி தூர்வாருதல் மற்றும் ஆழப்படுத்துதல், உபரி நீர்போக்கி (கலிங்கு), மதகு போன்ற அனைத்துக் கட்டமைப்புகளையும் பழுதுபார்த்தல் அல்லது புனரமைத்தல், இணைப்பு வரத்து வாய்க்கால்களைத் தூர்வாருதல் ஆகியவற்றை பொதுமக்கள் பங்கேற்புடன் செயல்படுத்துவது இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

இந்த நீர்நிலைகளைப் புனரமைப்பதால், நீர்நிலைகளின் கொள்திறன் அதிகரிக்கும். நிலத்தடி நீர் மட்டம் உயரும். வேளாண் நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதி ஏற்படும். உபரி நீர் வீணாவதையும் தடுக்கும். சிறுபாசன ஏரிகளின் கொள்ளளவினை மேம்படுத்தி புனரமைப்பதன் மூலம் வெள்ளம் மற்றும் வறட்சி ஆகிய இரண்டையும் தடுக்கும். பேரிடர் மேலாண்மை முயற்சிகளுக்கு இத்திட்டம் முக்கியப் பங்களிப்பு வழங்கும்.

மேம்படுத்தப்படும் ஏரிகளில் தேவைப்படும் கட்டுமானப் பணிகளான வரத்து மற்றும் போக்குக் கால்வாய், கலிங்கு, மதகு மறுசீரமைக்கும் பணிகள் தேவைப்படின் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் மேற்கொள்ளப்படும். சிறுபாசன ஏரிகளின் கரைகளை பலப்படுத்தி, பசுமைச் சூழலை ஏற்படுத்த பனை மற்றும் உள்ளூர் வகை மரக்கன்றுகள் நடப்படும்.

இத்திட்டம், அரசு மற்றும் அரசு சாரா நிறுவனம், சமூக அமைப்புகள், விவசாயிகள் சங்கம், கல்வி நிறுவனங்கள் போன்றவற்றின் சொந்த நிதி ஆதாரம் மற்றும் மக்கள் பங்களிப்புடன் கூடிய ‘நமக்கு நாமே’ திட்டம் மூலமாகவும் மற்றும் மீதமுள்ள சிறுபாசன ஏரிகளுக்கு அரசு நிதி மற்றும் ஊராட்சி அமைப்புகளின் நிதியின் மூலமாகவும் பணிகள் நிறைவேற்றப்படும்.

ஆயக்கட்டுதாரர்கள் மற்றும் பயன்பாட்டாளர் அமைப்புகளுடன் சேர்ந்து சிறுபாசன ஏரிகளின் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும். ஆயக்கட்டுதாரர்கள் மற்றும் பயன்பாட்டாளர் அமைப்பு இல்லாத பட்சத்தில், புதியதாக பயன்பாட்டாளர்கள் குழுக்கள் அமைத்து புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்தின் மூலம் ஊரகப் பகுதி விவசாயிகள் பெருமளவில் பயன்பெறுவதோடு நிலத்தடி நீர்மட்டமும் கணிசமாக உயரும்.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### விவசாயிகளுக்கு உர விற்பனை: இணை இடுபொருட்களை வாங்க

# உர விற்பனையாளர்கள் கட்டாயப்படுத்தக் கூடாது!

## வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் உத்தரவு!

**சென்னை, செப்.12–**

**விவசாயிகளுக்கு உர விற்பனை செய்யும் போது இணை இடுபொருட்களை வாங்க உர விற்பனையாளர்கள் மற்றும் இடுபொருள் விற்பனையாளர்கள் கட்டாயப்படுத்தக் கூடாது என வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் உத்தரவிட்டுள்ளார்.**



அதன் விபரம் வருமாறு:

வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் தலைமையில் நேற்று முன்தினம் (10.09.2024), தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில் தமிழ்நாட்டில் தற்போது அனைத்து பயிர்களுக்கும் தேவையான உரத் தேவை இருப்பு மற்றும் விற்பனை குறித்து விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

ஆய்வுக்கூட்டத்தின் போது யூரியா, டிஏபி, பொட்டாஷ், காம்ப்ளக்ஸ் மற்றும் இதர உரங்களின் தேவை மற்றும் சம்பா பருவத்திற்குத் தேவையான கையிருப்பு குறித்து ஆய்வு செய்யப்பட்டு தற்போதைய உர இருப்பு தேவையைவிட அதிகமாக அனைத்து மாவட்டங்களிலும் இருப்பு வைக்கப்பட்டுள்ளது உறுதி செய்யப்பட்டது.

போதுமான உர இருப்பு இருந்த போதிலும், வேளாண் இணை இடுபொருட்களை, விற்பனையாளர்கள் கூடுதலாக விவசாயிகளிடம் வாங்குவதற்குக் கட்டாயப்படுத்துவது தொடர்பாக விவசாயிகளிடமிருந்து கோரிக்கை பெறப்பட்டது. விவசாயிகளுக்கு உர விற்பனை செய்யும்போது இணை இடுபொருட்களை வாங்க கட்டாயப்படுத்தக் கூடாது என கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டது.

அவ்வாறு விவசாயிகள் விரும்பாத இடுபொருள்களை வாங்க வலியுறுத்தும் உர விற்பனையாளர்கள், இடுபொருள் விற்பனையாளர்களின் மீது சட்டப்படி நடவடிக்கை பாயும் என எச்சரிக்கப்பட்டது.

இதனை மீறும் உர விற்பனையாளர்கள் மற்றும் வேளாண் இடுபொருள் விற்பனை மையங்கள் மீது உரக் கட்டுப்பாட்டு ஆணை 1985இன்படி, கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளவும், தேவைப்படும் நிகழ்வில் உரிமத்தை ரத்து செய்யவும் வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் உத்தரவிட்டார்.

வேளாண்மை உதவி அலுவலர்கள் மற்றும் களப் பணியாளர்களுக்கு உரப்பயன்பாடு குறித்தும் மண்ணின் வளத்தை பாதுகாத்திடவும், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் போதிய பயிற்சி அளிக்க வேண்டும்.

மேலும், மாவட்ட அலுவலர்கள் பருவத்திற்குத் தேவையான உரங்கள் தட்டுப்பாடின்றி கிடைக்கவும், தரமான உரங்கள் வினியோகம் செய்வதையும் உறுதி செய்ய வேண்டும் எனவும் அறிவுரை வழங்கப்பட்டது.

இக்கூட்டத்தில் வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலாளர், செல்வி அபூர்வா, வேளாண்மைத் துறை இயக்குநர், பி.முருகேஷ், உர நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சி.என்.ஆர். (எ) சி.என்.ரத்தினம்

**செப்டம்பர் 12 (2019)**



வடசென்னை பகுதியில் கழகம் வளர்த்தவர்களில் ஒருவர்.

ஆர்.கே.நகர் பகுதிச் செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராக கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

இந்தி எதிர்ப்பு போராட்டம், இலங்கை தமிழர் ஆதரவு போராட்டம் என கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**